2012 மே 8]

அவர்களுக்கும் இந்தத் துறையிலே பதவி உயர்வு வழங்குவதற்கு திட்டமிடுதல் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக கிராம நிருவாக அலுவலர்கள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களையும் வருவாய்த் துறையில் Junior Assistants-களாகப் பணிபுரிவதற்கு வாய்ப்புகள் அளிக்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

225—

புனல் மின் திட்டம்

***5340—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் 4x125 மெகா வாட் திறன் கொண்ட நீரேற்றுப் புனல் மின் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் 4x125 மெகா வாட் திறன் கொண்ட நீரேற்றுப் புனல் மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4x125 மெகா வாட் திறன் கொண்ட நீரேற்றுப் புனல் மின் திட்டத்தை மேட்டூர் ஸ்டான்லி அணையைக் கீழணையாகக் கொண்டு, உபயோகத்திற்குக் கீழே உள்ள தண்ணீரை மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு மேல்புறம் கோவில்பாளையம் என்னும் கிராமத்திற்கு அருகில் ஓடும் சிறு கிளை நதியிலே ஒரு சிறிய மேல் அணையைக் கட்டி, நீரைத் தேக்கி, பூமிக்கு அடியிலே தலைக் குழாய் சுரங்கம், மின் நிலையம் மற்றும் கடைக் குழாய் சுரங்கம் ஆகியவற்றை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்தால், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டமைப்பின் உச்ச மின் தேவையைப் பெருமளவிலே பூர்த்தி செய்யலாம். சுமார் 500 மெகா வாட் மின்சாரம் பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதாக ஆய்விலே தெரிய வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, கடந்த 8-11-2011 அன்று (மணியடிக்கப்பெற்றது) இந்தக் கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். அப்பொழுது அவர் ஆய்விலே இருக்கிறது என்றும், அந்தச் செயற்குறிப்பு விரைவிலே ஆய்வு செய்யப்படும் என்றும் சொல்லியிருந்தார்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர், ஒரு நிமிடம். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், ஏற்கெனவே கேட்ட ஒரு* question-*ஐத் திரும்பவும்* repeat *பண்ணக்கூடாது என்று. இந்தத் தொடரில் 10 நாளைக்கு முன்னர் இந்தக் கேள்வியைக் கேட்கும்போது, அது ஆய்வில் இருக்கிறது என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆய்வில் என்றால், நிலம் கையகப்படுத்தவேண்டிய வேலைகள் இருக்கும்;* Materials Procurement *இருக்கும்;* Tender Procedures *இருக்கும். இதையெல்லாம் பார்த்து ஒரு முடிவுக்கு வருவதற்குக் கிட்டத்தட்ட சில நாட்கள் ஆகலாம்; பல நாட்கள் ஆகலாம். ஆகவே, 'நேற்று கேட்டபோதும், அந்தப் பணி ஆய்வில் இருக்கிறது என்றீர்கள்; இன்றைக்கும் அது ஆய்வில் இருக்கிறது என்று சொல்கிறீர்களே!' என்று கேட்பது முறையல்ல. புது விஷயமாக இருந்தால், அதையொட்டி சொல்லுங்கள். பழைய விஷயங்களைப் பற்றி மீண்டும் கேட்டால் அதை அனுமதிக்க முடியாது.*

2012 மே 8]

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே இந்தப் பணியை தொடங்குவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து இனிமேல் இந்த மாதிரி practice வைத்துக்கொள்ளாதீர்கள். இல்லையென்றால் இது வளர்ந்துகொண்டே போகும். 'நேற்று கேட்டேன்' ஏன் கொடுக்கவில்லை? இன்று கேட்டேன், ஏன் கொடுக்கவில்லை? என்பது சரியல்ல. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கெனவே பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்திருக்கின்றேன். பொதுவாக நீரேற்று மின் நிலையம் என்பது தேங்கி இருக்கின்ற தண்ணீரை, மின்சாரம் உபரியாகக் கிடைக்கின்றபோது அதைப் பயன்படுத்தி, அந்தப் பகுதியிலே மேலே ஒரு அணையைக் கட்டி, அதற்குப் பின்பாக அதைப் பம்பிங் செய்து அந்த நீரை ஏற்றி மேலணையில் சேமிப்பார்கள். அதற்குப் பின்பு, அதே தண்ணீரை மீண்டும் கீழே இறக்கி மின்சாரம் உற்பத்திச் செய்யப்படும் தண்ணீரைச் சுழற்சி முறையிலே பயன்படுத்தி, மின்சாரம் தயாரிப்பது. வால்பாறையிலே காடம்பாறை பகுதியிலே நீரேற்று மின்நிலையம் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

Peak Hours என்று சொல்லக்கூடிய, மின்சாரம் பயன்பாட்டிற்கு மிகவும் தேவைப்படும் நேரத்திலே மின்சாரத்தை அதிக அளவில் பயன்படுத்துகின்ற நேரத்திலே பற்றாக்குறை வருகிறது. சில நேரங்களிலே இரவு நேரங்களிலே கூடுதல் மின்சாரம் தேவைக்கு அதிகமாகக் கிடைக்கிறது. தேவைக்கு அதிகமாகக் கிடைக்கின்றபோது அதை வீணாக்காமல் அந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி, நீரை பம்பிங் செய்து மேலே ஏற்றி, அதே நீரைத் திரும்பப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கின்ற ஒரு அருமையான திட்டம்தான் இது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இப்போது தமிழ்நாடு மின்சார வாரியம் பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுவருகிறது. அந்தப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, மேட்டூரில் உள்ள அந்தப் பகுதியில், கோவில்பாளையம் அருகில் உள்ள சிற்றருவியின் குறுக்கே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கம் உருவாக்கும் திட்டம் உள்ளது. உயர்ந்த

இடத்தில் ஒரு அணையைக் கட்டவேண்டும். கீழே ஒரு அணை இருக்கும். இந்த இரண்டு அணைகளுக்கும் நீரை பம்பிங் செய்து நீரைத் திருப்பியனுப்பி, சைக்கிளிங் முறையில் செய்ய வேண்டும். இதற்கான இப் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த ஆய்வுப் பணிகள் முடிவுற்றவுடன் அதிலே சாத்தியக்கூறுகள் இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 500 மெகா வாட் மின்சாரம் தயார் செய்யக்கூடிய அளவுக்கு ஆய்வுகள் செய்யப்படுவதாகக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு அந்தப் பணியைத் தொடங்கினால் நம்முடைய மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, அதற்குப் பின்பு இந்தத் திட்டத்தில் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று ஆய்விலே வந்தாலும்கூட, அதைச் செயல்படுத்துவதற்குக் குறைந்தது ஐந்து ஆண்டுக் காலம் ஆகும். ஆனாலுங்கூட, எவ்வளவு விரைவாக இந்த ஆய்வுகளை முடித்து, இந்தப் பணிகளை மேற்கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அந்தப் பணிகளை மேற்கொள்ளும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று குந்தா நீரேற்று மின் நியைத்தை 500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய நாம் திட்டம் தயார் செய்து மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பிய பிறகு, அங்கும் இதே பிரச்சினைதான். காவிரி ஆற்றினுடைய துணை நதியான பவானி ஆற்றிலிருந்து, அதன் துணை நதியான குந்தா நதியிலிருந்து நீங்கள்

மின்சாரம் எடுப்பதால் காவிரி நீர்நிலை ஆணையத்தினுடைய அனுமதியைப் பெறவேண்டும் என்று சொல்லி, திட்டங்கள் எல்லாம் தயார் செய்து, ஆய்வுகள் செய்து, அதைச் செயல்படுத்துவதற்குத் தயாரான நிலையில் மத்திய அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. அதேபோன்ற ஒரு சூழ்நிலை இந்தத் திட்டத்திலும் வந்துவிடுமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஏனென்று சொன்னால், இதுவும் மேட்டூரில் உள்ள பகுதியிலே இருந்தாலுங்கூட—மத்திய அரசுதான் இங்கே வில்லன்போல; எப்படியெல்லாம் இதைத் தடுத்து நிறுத்துவது என்ற கண்ணோட்டத்திலே பார்க்கிறது—ஆய்வுகளை மேற்கொண்டு மத்திய அரசின் அனுமதியைப் பெற்று இந்தப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

பேருந்து நிலையம்

***1268—திரு. கா. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, குன்னூர் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) ஆம்.